Sri Lankan Journal of Arabic and Islamic Studies
ISSN: 2550:3014
Published by: Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka

# இலங்கையில் நியமனம் பெறும் காழிகளின் நடத்தைகள்: ஓர் இஸ்லாமிய, கள அனுபவப் பகுப்பாய்வு

**M.I.M. Jazeel[1], and M.B. Fowzul[2]**

1Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka

2Department of Islamic Studies, Eastern University, Sri Lanka

1. jazeelmi@seu.ac.lk; 2. fowzulbuhary@gmail.com / fowzulb@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

*நீதிப் பரிபாலனத்தில் 'காழி'யின் நடத்தை பிரதான எண்ணக்கரு. இஸ்லாமிய சட்டத்துறை இலக்கியங்கள் 'காழி'யின் ஒழுக்கவியல் நடத்தை ('ஆதாபுல் காழி') பற்றி விரிவாக விவாதித்துள்ளன. நீதிப்பரிபாலனம் பொருத்தமானதாகவும், வெளிப்படையானதாகவும் அமைவதற்கு 'காழி'யின் நடத்தை பற்றிய கரிசனை அவசியமாகும். இவ்வாய்வு பண்புசார், அளவுசார் முறைமைகள் இரண்டையும் தழுவிப் இலங்கையில் 'காழி'களின் நடத்தையைப் பரிசீலனை செய்கின்றது. வினாக்கொத்தை பயன்படுத்தி வழக்காளிகள் மற்றும் 'காழி'களிடம் பெறப்பட்ட தரவுகள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடனான நேர்காணல், கள அவதானக் குறிப்புக்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்களும் இங்கு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் கண்நோக்கை அமைத்துகொள்வதற்கு அதன் மூலஆவணங்களையும் பிரதான இமாம்களின் கருத்துக்களையும், நவீன கால அறிஞர்களின் சிந்தனைகளையும் துணையாகக் கொள்ளப்பட்டுள்ளது. பெண் வழக்காளிகளை நடாத்துதல், அன்பளிப்புகளை ஏற்றல் போன்ற 'காழி'கள் சிலரின் நடத்தை குறித்த குறைகூறல்கள் உள்ள போதிலும் அவர்களின் நல்லொழுக்கம், நடுநிலைமை, சமமாக நடாத்துதல் என்பன தொடர்பில் பொதுவான சிறந்த மதிப்பீடு உள்ளது. இவ்வாய்வை காழிகளுக்கான முன்மாதிரி நடத்தைக் கேவையாக அல்லது காழிகளின் நடத்தைசார் வழிகாட்டியாகக் கொள்ள முடியும்.*

**திறவுச்சொற்கள்**: இஸ்லாத்தில் நீதிப் பரிபாலனம், இலங்கையில் காழி, காழியின் நடத்தைகள்

## 1. அறிமுகம்

மனித வரலாற்றில் நீதி பெறுமானமிக்கதோர் உயர்ந்த பண்பாகும். ஆகவே, அதன் காவலர்களான நீதிபதிகள் சமூக மதிப்பையும், அந்தஸ்தையும் கொண்ட உயர் பதவியுடையோராகவே கணிக்கப்பட்டனர். நீதிப் பரிபாலனம் நபித்துவப் பணி என்று அல்

குர்ஆன் காண்பிக்கின்றது. மனித சமூகங்களுக்கு அனுப்பப்பட்ட இறைத் தூதுவர்கள் இறைத்தூதர்களாக இருந்த அதேவேளை, நீதிபதிகளாகவும் செயற்பட்டுள்ளனர் என்பதைஅல் குர்ஆனின் வாசகங்கள் குறிப்பிடுகின்றன (அல்குர்ஆன் 38:26). 'நமது தூதர்களைத் தெளிவான சான்றுகளுடன் அனுப்பினோம். அவர்களுடன் வேதத்தையும், மக்கள் நீதியினை நிலைநாட்ட தராசையும் அருளினோம்' (அல் குர்ஆன் 57:25). நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் ஒன்றாக நீதித்துறையும் அமைந்திருந்தது. 'அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் அவர்களிடையே தீர்ப்பளிப்பீராக' (அல் குர்ஆன் 05:48) போன்ற அல் குர்ஆன் வாசகங்கள் நபி (ஸல்) அவர்களின் நீதி செலுத்தும் பண்பினைத் தெளிவாக விளக்குகின்றன.

பொதுவாக, இஸ்லாத்தில் 'அத்ல்' பற்றிய கோட்பாடு மனித நடத்தை முழுவதையும் வியாபித்திருக்கின்ற அடிப்படை நியமமாகும் (Jazeel and Fowzul, 2014a). ஆயினும், 'அத்ல்' எனும் நீதமான நடத்தை 'காழி'யிடம் அமைந்திருப்பதை இஸ்லாமிய சட்டத்துறை அவசியமானதாகக் கருதுகின்றது. ஒரு சாட்சியின் நடத்தையை அவர் சாட்சியாகப் பங்கு கொள்ளத் தகைமையாக கருதும் இஸ்லாம் ஒரு நீதிபதியின் நடத்தை பற்றி வரையறுத்திருப்பது மிகப் பொருத்தமானதாகும். நீதிப் பரிபாலனம் பொருத்தமானதாகவும், வெளிப்படையான தாகவும் அமைவதற்கு 'காழி'யின் நடத்தை பற்றிய கரிசனை அவசியமாகும் (Jazeel & Fowzul, 2014b).

எனவே, அல் குர்ஆனின் பல வாசகங்கள் (16:90, 06:152, 05:08) 'அத்ல்' எனும் நீதமான நடத்தை பற்றி விபரிக்கின்றன. இதற்கமைய, நீதிப்பரிபாலனத்தில் நீதமான நடத்தை தவிர்க்க முடியாத அடிப்படை என்பதுவே அல் குர்ஆனின் கருத்தாகும். 'மக்கள் மத்தியில் தீர்ப்பளிக்கும் போது நீதியாக நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் எனவும் அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகிறான்' (அல் குர்ஆன் 4:58). 'எனது அடியார்களே, நிச்சயமாக என் மீது நானே அநீதியைத் தடை செய்துள்ளேன். அவ்வாறே, உங்கள் மீதும் அதனைத் தடை செய்துள்ளேன். எனவே, நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதி இழைக்க வேண்டாம்' என்பது 'ஹதீஸ்' குத்ஸி வாசகமாகும் (முஸ்லிம், *ஸஹீஹ்,* ஹதீஸ் 6837, பா.8, ப.16). இறை தூதுத்துவத்தின் இலட்சியம் மனிதனிடையே அநீதியை ஒழித்து நீதியை நிலைநாட்டுவதுவே.

இலங்கை விவாக, விவாகரத்துச் சட்டத்தின் 12ம் இலக்க உட்பிரிவு 1 நன்னடத்தையும், நன்னிலமையில் உள்ளவரும் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் 'காழி'யாக நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதை விதிக்கின்றது. இதற்கமைவாக, நீதிச் சேவை ஆணைக்குழுவின் வர்த்தமானி அறிவித்தல் 'விண்ணப்பதாரி இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும்

உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும் என இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் (2014,பெப்ரவரி,15) குறிப்பிட்டுள்ளது.

ஏனெனில், மக்கள் தம் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்குமென நீதித்துறையின் மீதே நம்பிக்கை கொண்டுள்ளனர். நீதிப் பரிபாலனத்தில் நீதியை நாடிவருபவர்களுக்கு அதனை வழங்கும் போதே நீதித்துறை மீதான நம்பிக்கை அதிகரிக்கும். இவ்வாறு அவர்களின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்வதே நீதித்துறை அலுவலர்களின் கடமையாகும். அந்தவகையில், பக்கசார்பின்மை, நீதித்துறைச் சுதந்திரம், நேர்மை, நன்னடத்தை என்பவற்றை ஒரு நீதிபதி கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டியவராவார்.

சர்வதேசத்திலும் நீதித்துறை அலுவலர்கள் பக்கச்சார்பற்றவர்களாகவும், நேர்மை, நன்னடத்தை, நற்குணம் என்பவற்றைப் பெற்றவர்களாகவும், சந்தேகம், குற்றம், அவப்பெயர் போன்றவற்றிலிருந்து தூய்மையானவர்களாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். ‘காழி’களும் நீதித்துறை அலுவலர்கள் என்பதனால் நீதிமன்றத்திலும் தமது தனிப்பட்ட வாழ்விலும் இவ்வொழுக்க விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றனர். அதற்காகவே, ‘காழி’களின் நியமனத்திற்கான தகைமைகளில் ஒன்றாக ‘நல்லொழுக்கம், சமூக அந்தஸ்த்து உள்ளவராக இருக்க வேண்டும்’ என நிபந்தனையிடப்படுகிறது (Jazeel & Fowzul, 2014b).

இலங்கையில் நியமனம் பெற்றுள்ள ‘காழி’களின் நடத்தைகளை மதிப்பிடல் எனும் ஆய்வின் பிரதான குறிக்கோள் பண்புசார், அளவுசார் முறைமைகள் இரண்டும் தேவைக்கேற்ப கலந்து பிரயோகிக்கப்படுவதன் ஊடாக அடைப்பட்டது. முதலாவதாக ஆய்வுக் கோட்பாட்டை கட்டமைப்பதற்கு நூலக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல் குர்ஆன், அஸ்ஸுன்னா, பிரதான இமாம்களின் கருத்துக்கள், இஸ்லாமிய வரலாற்று அனுபவம், நவீன இஸ்லாமிய சிந்தனையாளர்களின் கருத்துக்கள் என்பன இஸ்லாமிய கண்ணோக்கிற்கான அடிப்படைகளாக அமைகின்றன. இக்கோட்பாட்டு ரீதியான அமைப்புத் திட்டம் இலங்கையில் நியமனம் பெற்றுள்ள ‘காழி’களின் நடத்தைகளை ஒப்பிட்டுப் பரிசீலிப்பதற்கான அளவுகோள்களாகும். இலங்கையின் ‘காழி’ நீதிமன்ற முறைமை ‘காழி’கள் பற்றிய இலக்கியங்கள் மிக அரிதாகவே உள்ளன (Jazeel & Fowzul, 2018). விசேடமாக, இவ்விடயங்களை இஸ்லாமிய ஷரீஆவுடன் ஒப்பிட்டு நோக்குவது புதியதோர் கண்ணோட்டமாகும். எனினும், இஸ்லாமிய ஷரீஆவின் நீதிமன்ற முறைமை நீதிபதிகள் பற்றிய கோட்பாடுகளைப் பிரத்தியேகமாகக் கூறும் இலக்கியங்கள், ஸஊதி அரேபியா, எகிப்து, மலேசியா போன்ற நாடுகளின் நீதிமன்ற முறைமை பற்றிய இஸ்லாமிய ஷரீஆவுடனான ஒப்பீட்டாய்வுகள், இலங்கையின் ‘காழி’ நீதிமன்ற முறைமை, ‘காழி’கள் தொடர்பான பதிப்பிக்கப்பட்ட, பதிப்பிக்கப்படாத முதல்நிலை, இரண்டாம் நிலை

இலக்கியங்கள், அறிக்கைகள், சஞ்சிகைக் கட்டுரைகள் போன்றன இவ்வாய்வின் குறிக்கோள்களை அடைவதற்காக பயன்பாட்டிற்கும் மீளாய்வுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

இப்பரிசீலனைக்கு வழக்காளிகள் மற்றும் 'காழி'களிடம் பெறப்பட்ட தரவுகள் முதன்மையானவையாக அமைகின்றன. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடனான நேர்காணல், கள அவதானக் குறிப்புக்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்களும் இங்கு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் என்பன வழிமுறைகள் மூலம் அனுபவச்சான்றுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. தற்போது இலங்கையில் அறுபத்தைந்து 'காழி' நீதிமன்ற வலயங்கள் உள்ளன. ஒரு நீதிவலயத்துக்கு ஒரு 'காழி' என்ற அடிப்படையில் அறுபத்தைந்து 'காழி'கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், சில 'காழி'களின் பதவிக்காலம் முடிவடைந்தமை, அல்லது சில 'காழி'களின் பதவித் துறப்பு போன்ற காரணிகளினால் தற்போது சுமார் அறுபது'காழி'கள் கடமையாற்றுகின்றனர் 'காழி'களில் சுமார் எழுபது வீதமானோர் இவ்வாய்வை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களுக்கு பதிலளித்துள்ளனர். அறுபத்தைந்து 'காழி' நீதிமன்றங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறித்த மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் சனத்தொகை வீதம், வழக்குகளின் எண்ணிக்கைச் சதவீதம் போன்றனவற்றைக் கருத்திற் கொண்டதான வீதத்திற்கு ஏற்ப நானூறு வழக்காளிகள் எளிய எழுமாற்று மாதிரி மூலம தெரிவு செய்யப்பட்டனர். அவற்றில் மீளப்பெறப்பட்ட வினாக்கொத்துக்களின் எண்ணிக்கை 294 (73.5 வீதம்) ஆகும். வினாக்கொத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் அளவுசார் அளவீடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மென்பொருளான SPSS 16.0 மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 'காழி'களின் சபையின் செயலாளர், அகில இலங்கை உலமா சபையின் பொதுச்செயலாளர், முன்னாள் 'காழி'கள் நால்வர், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் செயற்பாட்டாளர், நீதிச்சேவை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர், சட்டத்தரணிகள் போன்றோர் மேலதிக தகவல்களுக்காகவும் 'காழி' யின் நடத்தைகள், நீதிமன்ற நடைமுறையின் அனுபவங்களை அறிந்து கொள்வதற்காகவும் நேர்காணப்பட்டனர்.

**2. சமமாக நடாத்துதல்**

'அத்ல்' எனும் எண்ணக்கரு பக்கச்சார்பின்மை, வார்த்தைகளின் உண்மை, நேர்மை, அமானிதத்தைப் பேணுதல், பத்தினித்தனம், பாவம் செய்யாமை, சார்பு நிலையின்மை, நன்னடத்தை, பேணுதல் போன்றவற்றை உள்ளடக்கியது என்றார் யூஸுப் (1986, ப.207).

அவற்றில் ஒன்றை 'காழி' இழந்து விடுவாராயின் அவரின் நியமனம் இரத்துச் செய்யப்பட்டு, அவரது தீர்ப்பும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என அல்-மாவர்தி (1994, ப.62) கருதுகின்றார். வாதி, பிரதிவாதிகளை சமமாக 'காழி' நடாத்துதலை 'அத்ல்' கோட்பாடு வேண்டி நிற்கின்றது. ஒரு வழக்காளியின் இன, மத, நிற, குல, கோத்திர, மொழி, தொழில், பதவி வேறுபாடு நீதிப்பரிபாலனத்தில் பாரபட்சமாக நடாத்தப்படுவதற்கு வழிகோலலாகாது. கலீபா உமர் (ரழி) அவர்களுக்கும் யூதன் ஒருவனுக்குமிடையிலான பிணக்கில் 'காழி' ஷுரைஹ் அவர்களுடைய நடவடிக்கை வரலாற்றுப் புகழ்மிக்கது. தன்னை நீதிபதியாக நியமனம் செய்த உமர் (ரழி) அவர்களின் விளக்கத்தை வலிதற்றதாக்கி யூதனுக்கு சார்பாக தீர்ப்பை வழங்கினார் ஷுரைஹ் (அல்-உமரி, 2003, ப.162). நீதிப்பரிபாலனத்தின் விசாரணையில் 'காழி' உயர்ந்த நிலையில் சமத்துவத்தைப் பேணுவது அடிப்படை என்பதை இவ்வரலாற்றுச் சான்றுகள் காண்பிக்கின்றன.

வழக்காளிகளைச் சமமாக நடாத்துதல் என்ற செயற்பாடு அவர்களை வரவேற்றல், அவர்களுடன் மென்மையாக நடத்தல், கண்டிப்பாக நடத்தல், புன்னகைத்தல், கடுகடுத்தல், அவகாசம் வழங்குதல், விளக்கத்தை செவியுறுதல், சான்றுகளை சமர்ப்பிக்க வாய்ப்பளித்தல், விபரங்களை விபரித்தல் போன்ற அனைத்திலும் வேறுபாடு காண்பித்தல் தகாது என்பதாக வரையறை செய்ய முடியும் என இஸ்லாமிய அறிஞர்கள் குறித்துள்ளனர் (அஹ்மத், 1996, ப.72,73). 'முஸ்லிம்கள் மத்தியில் தீர்ப்பளிக்க முற்படுபவர் அவர்களிடையே பேச்சிலும், சமிக்ஞையிலும், உட்கார வைப்பதிலும் நீதத்தை கைக்கொள்ளட்டும். வழக்காளிகளில் ஒருவர் மீது தனது சப்தத்தை உயர்த்தாத நிலையில், மற்றவர் மீதும் தனது சப்தத்தை உயர்த்தாமல் இருக்கட்டும்' (தாரகுத்னீ, ஹதீஸ் 10, பா.04, ப.205). என நபியவர்கள் அறிவுறுத்தியமையை இதற்கான சான்றாக கொள்ள முடியும்.

நீதித்துறையில் சமமாக நடாத்துதல் என்பது பக்கச்சார்பின்றி நடாத்துதலை குறித்து நிற்கிறது எனலாம். நீதித்துறையின் பக்கச்சார்பின்மையை பரீட்சித்துப் பார்க்கின்ற சவால்களாகவே பெரும்பாலான வழக்குகள் அமைகின்றன. பக்கச்சார்பின்மை எனும் போது, நியாமாக நடந்து கொள்ளல், பொறுமையாகவும் கவனமாகவும் நடந்து கொள்ளல், வழக்காளிகளில் எவரினது பக்கத்திற்கும் சாதகமாக நடந்து கொள்வது போல் தோன்றுவதிலிருந்தும் கூட தவிர்ந்து கொள்ளுதல் எனப் பொருள்படும் (மக்கீ, 2011, ப.6). பக்கச்சார்பின்றி நடத்தல் நீதித்துறை அலுவலர்களின் பிரதான பண்பு என்ற போதிலும், 'காழி'கள் இஸ்லாமிய ஷரீஆவுடன் தொடர்பான நீதிபதிகள் என்பதனால் இவ்விடயத்தில் கூடிய கரிசனை காட்டுவது வலியுறுத்தப்பட்ட விடயமாகும். 'காழி' நெருங்கிய உறவினர், நண்பர், செல்வந்தர் என்ற வகையில் பக்கச்சார்பாக செயற்படுவதை மாத்திரமன்றி, தன்னோடு விரோதம் உள்ளவர் என்பதற்காக நீதி செலுத்தாமல் இருப்பதையும் அல் குர்ஆன் கண்டிக்கின்றது.

‘‘நம்பிக்கை கொண்டோரே, உங்களுக்கோ, பெற்றோருக்கோ, உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் நீங்கள் நீதியை நிலைநாட்டுவோராகவும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுவோராகவும் ஆகிவிடுங்கள். (வாதியோ, பிரதிவாதியோ) செல்வந்தனாக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அவ்விருவருக்குமே அல்லாஹ்வே பொறுப்பாளன்’’ (அல்குர்ஆன் 4:135). மேலும், ‘‘ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகை நீங்கள் நீதியாக நடக்காமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதியாக நடங்கள். அதுவே இறையச்சத்திற்கு நெருக்கமானது. அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்’’ (அல்குர்ஆன் 5:8)

சர்வதேச சட்டம் ‘நீதிபதியொருவர் தனக்கு எவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று அவர் எதிர்பாக்கின்றாரோ, அவ்வாறே தனது வழக்காளிகளுக்குத் தீர்ப்பு வழங்க வேண்டுமெனக் கூறுகின்றது. ஆனால், அல்குர்ஆன் அதையும் தாண்டி, தீர்ப்பு உங்களுக்கு விரோதமாக இருந்தாலும் கூட நீதி தவறாதீர்கள். ஒரு கூட்டத்தினர் மீதான விரோதம் கூட நீங்கள் அநீதியாகச் செயற்படுவதற்குக் காரணியாக அமைந்து விடக் கூடாது என்று நீதிக்காக குரல் கொடுக்கின்றது. தனது கோத்திரத்தவன், தனக்கு நெருக்கமானவன் என்பதற்காக அவனது அநீதியையும் பொருட்படுத்தாது, அவனுக்கு சார்பாகவே செயற்படுவது ‘ஜாஹிலிய்ய வெறித்தனம்’ என்று நபி (ஸல்) அவர்கள் கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை, ஒரு வழக்காளி தனது ‘காழி’ தனது வழக்கில் பக்கச்சார்பாக செயற்படுவார் என்று கருதும் சந்தர்ப்பத்தில் அல்லது ஒரு ‘காழி’யின் முன் அவரது நெருங்கிய உறவினரின் வழக்கு முன்வைக்கப்படும் போது அவ்வழக்கை விசாரிப்பதற்கு விசேட ‘காழி’ ஒருவரை நியமிக்குமாறு நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் கோருவதற்கும் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் பரிந்துரை செய்கின்றது (Jaldeen, 2004, p.240) ஆயினும், சில ‘காழி’கள் தமது நெருங்கிய உறவினர்களின் வழக்குகளை அவர்களாகவே விசாரித்து தீர்ப்பு வழங்கியதாகத் தரவுகள் குறிப்பிடுவது, மேற்சொன்ன நடைமுறைகளை ‘காழி’களில் சிலர் கருத்தில் கொள்ளவில்லை என்பதையே காண்பிக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்கள் தாம் நடுநிலையாக செயற்படுவதற்குச் சவாலாக அமைந்ததாக ‘காழி’களும் தெரிவித்துள்ளனர்.

நெருங்கிய உறவினர் வழக்காளியாக அமைந்த சந்தர்ப்பங்களின் போது, பெரும்பாலான ‘காழி’கள் அயலிலுள்ள ‘காழி’ நீதிமன்றப் பிரிவுக்கு வழக்காளியை அனுப்பியதாகவும், விசேட ‘காழி’யை நியமிக்குமாறு காழிகள் சபையிடம் கோரியதாகவும் கூறியுள்ளனர். ஆயினும், சில ‘காழி’கள் அவற்றை அவர்களாகவே விசாரித்து தீர்ப்பு வழங்கியதாகத் தெரிவித்துள்ளனர். இத்தகைய நெருங்கிய உறவினர்களின் வழக்கில் ‘காழி’ நீதமாக செயற்பட்டாலும் கூட, அவரது நீதத்தில் சந்தேகிக்கும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. இது ‘காழி’யின் ஏனைய நீதிமன்ற நடவடிக்கைகளைக் கூட பாதிக்கும்.

சில 'காழி'களின் இந்நடைமுறை 'காழி' நீதிமன்ற முறைமையின் மீதான அதிருப்தியையும், அவநம்பிக்கையையும் பொது மக்களிடம் ஏற்படுத்தியுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, வழக்காளிகளுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்தில் (வினாக்கொத்து இல. 241) ஒருவர் 'எனது மனைவி 'காழி'யின் உறவினராக இருந்ததால், அவருக்கு சார்பாகவே 'காழி' தீர்ப்பை வழங்கினார்' என்றும், மற்றொருவர் (வினாக்கொத்து இல. 177) 'எனது மனைவி 'காழி'யின் மருமகள் என்பதனால், எந்தவொரு விசாரணையுமின்றி 'காழி' தீர்ப்பை முடித்து விட்டார்' என்றும் தமது பின்னூட்டங்களை தெரிவித்தனர்.

'காழி'கள் பக்கச்சார்பாக செயற்பட பின்னணியாக அமைந்த காரணிகளை கீழ்க்காணும் அட்டவணை 4.3 காண்பிக்கின்றது. அட்டவணை 4.3 இன்படி, 'காழி'யின் நடுநிலையான நீதிப்பரிபாலனத்திற்கு சுமார் 50 வீதமான அளவு நெருங்கிய உறவு முறையும், நட்பும் தடையாக அமைந்துள்ளது. அவ்வாறே, 'காழி'களில் நான்கில் ஒரு பகுதியினர் மீது குடும்ப செல்வாக்கும் அழுத்தமும் கூட பிரயோகிக்கப்பட்டுள்ளது எனலாம். இவ்வாறு 'காழி' நெருங்கிய உறவுமுறை, நட்பு, குடும்ப செல்வாக்கு என்பவற்றிற்கு உட்பட்டதால் தாம் பாதிக்கப்பட்டதாக வழக்காளிகளில் 29.2 வீதமானோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

அட்டவணை 4:3 நடுநிலையான நீதிச் செயற்பாட்டிற்கு சவாலான காரணிகள்

| இல. | சவாலாக அமைந்த விடயம் | பெரிதும் | சாதாரணம் | ஓரளவு | அறவே இல்லை |
|---|---|---|---|---|---|
| 1 | உறவு முறை | 15.6% | 9.4% | 21.9% | 53.1% |
| 2 | நட்பு | 15.6% | 6.2% | 25.0% | 53.1% |
| 3 | வியாபாரத் தொடர்பு | 7.7% | 7.7% | 0% | 84.6% |
| 4 | குடும்ப செல்வாக்கு | 6.9% | 3.4% | 17.2% | 72.4% |
| 5 | அரசியல் அதிகாரம் | 13.3% | 3.3% | 6.7% | 76.7% |

மூலம்: Survey 2014

மேலும், நீதிமன்ற செயற்பாடுகளில் அரசியல் அதிகாரம் பிரயோகிக்கப்படுவதாக 'காழி'களில் 24.3 வீதமானோர் தெரிவித்துள்ளனர். இதனை தாம் அவதானித்ததாக வழக்காளிகளில் 9.7 வீதமானோர் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்துடன், அரசியல்வாதிகள் 'காழி'களை அச்சுறுத்தியதாகவும், செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்ததாகவும் தரவுகள் குறிப்பிடுகின்றன. அரசியல்வாதி ஒருவர் தனது மகனின் விவாகரத்து வழக்கில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த முயன்ற போதிலும், அதனைப் பொருட்படுத்தாது குறித்த பெண்ணுக்கு பெறுமதி வாய்ந்த நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுத்ததாக 'காழி'யொருவர் கூறியமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

மேலும், 'காழி'களின் வியாபார நடவடிக்கைகள் (15.4%) கூட அவர்களது நடுநிலையான செயற்பாட்டிற்குத் தடையாக அமைந்துள்ளதையும் அவதானிக்க முடிந்தது. இஸ்லாமிய சட்டத்துறை இலக்கியங்கள் 'காழி' பக்கச்சார்பாக நடந்து விடுகின்ற வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றே அறிவுறுத்துகின்றன. இந்த வகையில், 'காழி' வணிகத்தில் ஈடுபடுதல், தொழில் புரிதல் போன்றன அவரை மக்களோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி அவர்களுக்குச் சார்பாக செயற்படவும் மதிப்பை இழக்கவும் நீதிப்பரிபாலனத்தில் ஈடுபடும் அவகாசத்தை குறைக்கவும் துணைசெய்யுமென்றே கருதப்படுகிறது. ஆகவே தான், 'நீங்கள் கொடுக்கல் வாங்களில் ஈடுபடாதீர்கள்' என உமர் (ரழி) அவர்கள் 'காழி'களுக்குக் கட்டளையிட்டார்கள் (அப்துர் ரஸ்ஸாக், *முஸன்னப்,* பா.08, ஹதீஸ் 15290).

### 3. வழக்காளிகளுடனான 'காழி'யின் நடத்தை

'காழி' உயர்ந்தளவிலான உண்மைத்தன்மை, நம்பகத்தன்மை என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார். 'ஒரு சபையில் பேசப்படுகின்ற விடயம் அமானிதம்' என்ற இஸ்லாத்தின் போதனைக்கேற்ப, தனிப்பட்ட இரகசியங்கள் பேசப்படுகின்ற நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் அமானிதமாகும். வழக்காளிகள் தமது பிரச்சினைகளை மனம் திறந்து பேசுகின்ற அளவுக்கு 'காழி' நம்பத்தகுந்தவராக இருக்க வேண்டும். அப்போது தான், 'காழி'யின் மீதான நம்பிக்கை மேலோங்கும். பொதுமக்களின் நீதித்துறை மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது நீதிபதிகளின் கடமையாகும்.

அதற்கேற்ப தமது 'காழி'கள் நம்பத்தகுந்தவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் உள்ளனர் என வழக்காளிகளில் 76 வீதமானவர்கள் கூறியுள்ளமை, பெரும்பான்மையான 'காழி'கள் மக்களின் நன்னம்பிக்கையைப் பெற்றுள்ளனர் என்பதைக் காண்பிக்கிறது. ஆயினும், 24 வீதமானவர்கள் தமது 'காழி' நம்பிக்கையும், நேர்மையும் அற்றவர் என அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வாறு தெரிவித்தவர்களில் 17 வீதமானவர்கள் பெண்கள் என்பதும் அவதானத்திற்குரியதாகும். அதே அளவான, (24 வீதமான) வழக்காளிகள் 'காழி'யின் மீதான அவநம்பிக்கையினால், கணவன்-மனைவிக்கு இடையிலான தமது பிரச்சினைகளை அல்லது தமது தனிப்பட்ட இரகசியங்களை 'காழி'யிடம் வெளிப்படையாகக் கூறத் தயங்கியதாக தெரிவித்துள்ளனர். சில 'காழி'கள் நீதிமன்றத்தில் கூறப்பட்ட இரகசியங்களைப் பகிரங்கப்படுத்துவதாகவும் சில வழக்காளிகள்

குறிப்பிட்டனர். இத்தரவுகள் 'காழி'களிசிலர் வழக்காளிகளின் நம்பிக்கைக்கு உரியவர்களாகச் செயற்படவில்லை என்பதையே சுட்டுகின்றன.

மேலும், வாதியும், பிரதிவாதியும் சம அளவில் தமது நியாயங்களை முன் வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். 'வாதி, பிரதிவாதி இருவரில் ஒருவரை மாத்திரம் விசாரணை செய்துவிட்டு, அடுத்தவரின் கருத்தை செவிமடுக்காமல் தீர்ப்பு வழங்க வேண்டாம்' என நபி (ஸல்) தடை விதித்துள்ளார்கள் (அஷ்-ஷவ்கானி, 2002, பா.10, ப.169). அந்த வகையில் வாதியும், பிரதிவாதியும் தமது கருத்தைக் கூறுவதற்கு அவகாசம் வழங்கப்பட்டதாக அனைத்து 'காழி'களும் தெரிவித்துள்ளனர். அதை 83 வீதமான வழக்காளிகள் உண்மையென உறுதிப்படுத்தியுள்ளனர். இருப்பினும், 17 வீதமான வழக்காளிகள் தமக்கான அவகாசம் மறுக்கப்பட்டதாகவும், தமது நியாயத்தை விசாரிக்காமலேயே 'காழி'கள் தீர்ப்பை வழங்கி விட்டதாகவும் கூறியுள்ளனர். அவ்வாறே, சான்றுகளைச் சமர்ப்பிக்கவும் சாட்சிகளை முன்னிறுத்தவும் போதிய அவகாசம் வழங்கப்பட்டதென அனைத்து 'காழி'களும் குறிப்பிட்டதை வழக்காளிகளில் மிகப் பெரும்பான்மையினர் (80%) உறுதிப்படுத்தியுள்ளனர். ஆயினும், ஐந்தில் ஒரு பகுதியினர் (20%) 'காழி'கள் அவகாசம் வழங்காமல் பாரபட்சமாக நடந்து கொண்டதாகத் தெரிவித்துள்ளமையும் அவதானத்திற்குரியதாகும்.

வழக்காளிகள் தமது நியாயத்தை அல்லது சாட்சியை முன்வைக்க கால அவகாசம் போதாது என்று கருதும் பட்சத்தில் 'காழி'களில் மிகப் பெரும்பான்மையினர் (91மூ) விசாரணைகளை ஒத்திவைப்பதாகக் கூறியுள்ளதை, வழக்காளிகளில் 74 வீதமானவர்கள் உண்மைப்படுத்தியுள்ளனர். ஆயினும், இவர்களில் 11 வீதமானவர்கள் தமது 'காழி' தம்மைத் துரிதமாக விசாரித்ததாகவும், 8 வீதமானவர்கள் தமது 'காழி' பிரதிவாதியை மாத்திரம் விசாரணை செய்ததாகவும், 4 வீதமானவர்கள் நீதிமன்ற அமர்வுக்கு வெளியே தனித்தனியாக விசாரித்ததாகவும், 3 வீதமானவர்கள் 'காழி' விசாரிக்கவே இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

குறித்த நாளில் வழக்குகளை விசாரிக்க முடியாதவிடத்து, விசாரணைகளை ஒத்தி வைப்பதை இஸ்லாமிய ஷரீஆ அங்கீகரிக்கின்றது. அதை 'காழி'கள் கடைப்பிடிப்பதாக வழக்காளிகளில் நான்கில் மூன்று பகுதியினர் (74%) உறுதிப்படுத்துவது 'காழி'கள் விசாரணை நுட்பத்தில் ஷரீஆவின் வழிகாட்டலைப் பெருமளவு பின்பற்றுவதைக் காட்டுகின்றது. எனினும், நேர அவகாசமின்மையால், அல்லது வேறு காரணிகளால் வழக்காளிகளை அவசரமாக விசாரிப்பதனால், வழக்காளிகள் தமது நியாயத்தை முன்வைப்பதற்கான உரிமை மறுக்கப்படுகிறது. இருபக்க நியாயத்தையும் சமமாகச் செவிமடுக்காத 'காழி'யினால், எத்தரப்பின் பக்கம் நியாயம் இருக்கின்றது என்பதைப் புரிந்து

கொள்வது கடினமானதாக அமையலாம். இதனால், 'காழி'யின் தீர்ப்பு பக்கச்சார்பானதாக அமைவதற்கான வாய்ப்பே அதிகமுள்ளது. சிலவேளை, தமது நியாயத்தை முன்வைக்க அவகாசம் வழங்கப்படாத வழக்காளிகள் 'காழி'யின் தீர்ப்பை பக்கச்சார்பானதாகவே கருத இடமுண்டு.

மேலும், வழக்காளிகளை நிறுத்துவதில் சீரானதொரு அமைப்பு 'காழி' நீதிமன்றங்களில் காணப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. வாதியை வலது பக்கமும், பிரதிவாதியை இடது பக்கமும் நிறுத்துவதாக 'காழி'களில் நான்கில் மூன்று பகுதியினர் (74.3%) தெரிவித்துள்ளனர். ஆயினும், இவ்விடயத்தில் ஒரு சீரான ஒழுங்கமைப்பு பின்பற்றப்படவில்லை என்பதை வழக்காளிகளின் பதில்கள் குறிப்பிடுகின்றன. 3.5 வீதமான ஆண்களும், 5.5 வீதமான பெண்களும் 'காழி'யின் அருகில் தாம் நிறுத்தப்பட்டதாகக் கூறியுள்ளமை தவறானதோர் நடைமுறையைக் காண்பிக்கிறது. வழக்காளியை 'காழி' தனக்கு அருகில் நிறுத்துவது பக்கச்சார்பாக அமையலாம் அல்லது அவர் பக்கசார்பாக செயற்படுவதாக சந்தேகத்தை ஏற்படுத்தலாம். இந்நடைமுறையை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் இரு வழக்காளிகளும் தன் முன்னால் அமர்ந்திருக்கும் நிலையில் தீர்ப்பளித்ததோடு, 'நீதிமன்றத்தில் வழக்காளியை நிறுத்துவதிலும், அவர்களுடன் பேசுவதிலும், அவர்களுக்குப் பேசுவதற்கு அவகாசமளிக்கப்படும் நேரத்திலும் சமத்துவம் பேணுமாறு' வலியுறுத்தியுள்ளார்கள் (அஷ்-ஷவ்கானி, 2002, பா.10, ப.169).

#### 4. பால்நிலை பாரபட்சம்

'காழி' நடுநிலையாக, பக்கச்சார்பின்றி செயற்படுவதில் பால்நிலையும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். 'காழி'நீதிமன்றத்துடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு வழக்கு களிலும் வாதியாக அல்லது பிரதிவாதியாக ஆண் அல்லது பெண் இருப்பதே வழக்கமாகும். தமக்குள் முரண்பட்ட கணவனும் மனைவியும் தம் பிரச்சினைக்கு நியாயமான தீர்ப்பை எதிர்பார்த்தே 'காழி'யை நாடுகின்றனர். சிலவேளை, அவர்கள் நீதியை எதிர்பார்ப்பது போன்றே பக்கச்சார்பையும் 'காழி'யிடம் எதிர்பார்க்கலாம். எனவே, 'காழி' எவ்வித ஆண் பெண் பாகுபாடுமின்றி தனது பணியை நீதமாக, திறம்படச் செய்ய வேண்டும் என வலியுறுத்தப்படுகிறார்.

இஸ்லாம் ஆண், பெண் என்ற பாலியல் வேறுபாட்டை பாகுபாட்டிற்கும், பக்கச்சார்புக்குமுரியதாகக் கருதவில்லை. பால்நிலை வேறுபாட்டை உலகியல் நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்ட உடலியல் மாற்றங்களாகவே கருதுகின்றது. (மனைவியரான) அவர்களின் மீதுள்ள கடமைகள் போன்று அவர்களுக்கு முறைப்படி உரிமைகளும் உண்டு. (அல் குர்ஆன் 2:228). 'பெண்கள் ஆண்களின் உடன் பிறப்புக்கள்'

என்ற இஸ்லாத்தின் போதனைகள் பெண் என்பதற்காக பாரபட்சம் காட்டப்படக் கூடாது என்பதனை வலியுறுத்துகின்றன. எவ்விதப் பக்கச்சார்புமின்றி நீதியை நிலைநிறுத்துங்கள். அதுவே இறையச்சத்திற்கு மிகவும் நெருக்கமானது என்ற இறை கட்டளை (அல் குர்ஆன் 5:8) எவ்வடிவிலும் அநீதி தோன்றுவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை என தெளிவுபடுத்துகின்றது. ஆயினும், 'காழி'கள் ஆண்களுக்கு சார்பாகவே செயற்படுவதாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகள் கூறுகின்றன. இவ்வாய்வுக்காக வழங்கப்பட்ட வினாக்கொத்துக்க பதில் தந்துள்ள சில பெண்கள் தமது 'காழி' ஆண்களுக்கு சார்பாகவே செயற்படுவதாக தமது பின்னூட்டல் குறிப்புகளைப் பின்வருமாறு தெரிவித்துள்ளமை அவதானிக்கத்தக்கதாகும்.

*"'காழி' ஆணாக இருப்பதனால் ஆண்களின் பக்கமே தீர்ப்பு வழங்குகிறார். பக்கச்சார்பாகவும் நடந்து கொள்கிறார். எனது நிலைமையையும் எனது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கவனத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கினார்."*

*"'காழி'யார் என்னுடன் அநீதமாகவும், பக்கச்சார்பாகவும் நடந்து கொண்டார். என்னையும் எனது பிள்ளைகளின் நலனையும் கருத்திற் கொள்ளாமல் செயற்பட்டார். எனது கணவர் என்னை விட்டுப் பிரிந்து பத்து வருடங்களாகியும் எனக்கு இன்னும் விவாகரத்துச் சான்றிதழை பெற்றுத் தரவில்லை. இதனால் எனது பிள்ளைகளை வளர்ப்பதில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளேன்."*

*"'காழி' பெண்ணினத்தை இழிவுபடுத்தும் வார்த்தைகளைக் கூறி, நியாயமான முறையில் நீதி சொல்வதில்லை. முறையில்லாத கேள்விகளைப் பலர் முன்னிலையில் கேட்டு அவமானப்படுத்துகிறார். பெண்கள் என்ற வகையில் கேவலம். நாங்கள் நரகத்திற்குச் சென்று வரும் ஓர் உணர்வு என்னுள் தோன்றியது"*

*"'காழி' என்னிடம் எனது பிரச்சினைகளை விசாரித்த முறையினால், நான் மன உளைச்சலுக்கு ஆளானேன். அவர் பக்கச்சார்பாக செயற்பட்டார். நான் தாபரிப்புப் பணம் சம்பந்தமாக 'காழி'யிடம் முறையிட்ட போது, அதில் தனக்கு சம்பந்தமில்லையென்றும், அதை முறையிடுவதானால், இணக்க சபையில் முறையிடுமாறும் என்னை ஏவினார்"*

ஆயினும், தமது 'காழி' 'பெண்மையை மதித்து நடந்து கொண்டதாகவும் (85.6%), கௌரவமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதாகவும் (86.1%), மிகப் பெரும்பான்மையான பெண் வழக்காளிகள் தெரிவித்துள்ளனர். அவ்வாறே, தாம் இரகசியமாகச் சொல்ல விரும்பிய விடயங்களைச் சொல்வதற்கான சந்தர்ப்ப சூழல்

ஏற்படுத்தப்பட்டதாகவும், தமது நியாயங்களைச் சொல்ல 'காழி' ஊக்குவித்ததாக வும் சுமார் 70 வீதமான பெண் வழக்காளிகள் குறிப்பிட்டுள்ளனர். இது 'காழி'கள் பெண்மையை மதித்து, கௌரவமான வார்த்தைகளைப் பிரயோகித்துள்ளனர் எனக் காண்பிக்கிறது. எனினும், சுமார் 30 வீதத்திற்கும் குறைவான பெண்கள் மாத்திரம் அதனை மறுப்பதன் மூலம் மாத்திரமே பெண்களிடம் இத்தகைய நடத்தைகளுக்கு மாற்றமாக செயற்படும் 'காழி'களும் இருக்கின்றனர் எனத் தெரிகிறது. 'காழி' நீதிமன்றில் பேசப்படும் விடயங்கள் பெரும்பாலும் தனிப்பட்ட, குடும்ப இரகசியங்களுடன் தொடர்பானதாகவே இருப்பதனால், அதிகமான பெண்கள் தமது நியாயத்தைக் கூற வெட்கமும், அச்சமும் அடைகின்றனர். அத்தகைய பெண்களை அடையாளம் கண்டு ஊக்குவிக்கும் போது, அந்த 30 வீதமான பெண்களின் குறைகளும் நிவர்த்திக்கப்படலாம். இருந்த போதிலும், பெண் வழக்காளிகளை விசாரிக்கும் போது மேற்கூறப்பட்ட நடத்தைகளைப் பெரிதும் கைக்கொண்டதாக 'காழி'களில் நான்கில் மூன்று பகுதியினர் கூறுகின்றனர். ஏனையவர்கள் அவற்றை சாதாரணமாக அல்லது ஓரளவு கவனத்திற் கொண்டதாகத் தெரிவித்துள்ளனர். 'காழி'களின் இப்பதில்களை கீழ்க்காணும் அட்டவணை 4.4 தெளிவுபடுத்துகிறது.

**அட்டவணை 4.4: பெண் வழக்காளிகளுடன் காழியின் நடத்தை**

| இல. | நடத்தை | பெரிதும் | சாதாரணமாக | ஓரளவு | அரிதாக | அறவே இல்லை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெண்ணின் இயல்புகளைக் கருத்தில் கொள்ளல் | 72.7% | 18.2% | 9.1% | 0.0% | 0.0% |
| 2 | பெண்ணையும் அவரது எதிராளியான ஆணையும் சமமாக நடாத்துதல் | 76.5% | 23.5% | 0.0% | 0.0% | 0.0% |
| 3 | பெண் தனது இரகசியங்களை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளித்தல் | 82.4% | 14.7% | 2.9% | 0.0% | 0.0% |
| 4 | பெண் தனது நியாயங்களைக் கூற ஊக்கமளித்தல் | 73.5% | 20.6% | 5.9% | 0.0% | 0.0% |

மூலம்: Survey 2014

எனினும், இவ்வாறு பெண்களை அளவு கடந்து ஊக்குவிக்கும் சில 'காழி'கள், ஆண்களின் நியாயங்களைச் செவியேற்கத் தவறுவதாகவும் ஆண் வழக்காளிகளில் சிலர் தெரிவித்தமையும் அவதானிக்கத்தக்கதாகும்.

### 5. 'காழி' அன்பளிப்பு, இலஞ்சம் பெறல்

இஸ்லாமிய மூல ஆவணங்கள் 'காழி' அன்பளிப்புக்களை ஏற்றுக் கொள்வதை முற்றாக தடை செய்கிறது. 'ஷரீஆ'வில் அதிகாரிகளுக்குரிய அன்பளிப்புகள் எல்லை மீறலாகவே

கணிக்கப்பட்டு தடை விதிக்கப்பட்டுள்ளது (பைஹகீ, 1925, பா.10, ப.138). 'காழி'க்கான அன்பளிப்பு இலஞ்சமாகவே கொள்ளப்பட முடியும் என்பதை பனூ அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த இப்னு லுத்பியா எனும் நபித்தோழர் ஸகாத் பொருளை வழங்கியவர்களிடமிருந்து தனக்கான அன்பளிப்புக்களையும் பெற்றுக் கொண்டமையை நபியவர்கள் வன்மையாகக் கண்டித்தமை காண்பிக்கிறது (புகாரி, ஹதீஸ்: 2457). இவ்வாறு 'காழி' அன்பளிப்புக்களைப் பெறுவது கண்டிக்கத்தக்க பெரும்பாவமும், தடை செய்யப்பட்டதும் எனக் கருதுகிறார் அல்-மாவர்தி (1972, பா.2, ப.279,280).

'காழி' பெறும் அன்பளிப்பை அல்-ஹுமைழி (1989) மூன்றாக வகைப்படுத்துகிறார். ஒன்று, வழக்குடன் சம்பந்தப்பட்டவர் வழங்கும் அன்பளிப்பு. இது இலஞ்சமாகும். இரண்டு, 'காழி'ப் பதவியினையும் சமூக அந்தஸ்தினையும் கருத்திற் கொண்டு வழங்கப்படும் அள்பளிப்பு. இவ்வன்பளிப்பை ஏற்றுக் கொள்வது தடை செய்யப்பட்டது. மூன்றாவது, 'காழி'யின் பதவியைக் கருத்திற் கொள்ளாது வழங்கப்படும் அன்பளிப்புக்கள். இவ்வன்பளிப்புக்கள் பெற்றுக் கொள்ளத்தக்கவை என்று சிலர் கருதிய போதிலும் அவற்றையும் தவிர்ந்து கொள்வது 'காழி'யின் தூய்மையையும் பேணுதலையும் காண்பிக்க வல்லது என்கிறார் அஸ்-ஸர்ஹஸி (1912, ப.81,82). 'எவரிடமிருந்தும் அன்பளிப்புக்களை பெற்றுக் கொள்ளாதிருப்பதே மிகச்சிறந்தது' என்று சிலாகித்துக் கூறுகிறார் இப்னு அபித்தம் (1987, ப.69).

வழக்காளியினால் 'காழி'க்கென ஏற்பாடு செய்யப்படும் விசேட விருந்துபசாரத்தில் அவர் கலந்து கொள்வது பொருத்தமானதல்ல என்றும் இஸ்லாமிய சட்டத்துறை குறிப்பிடுகின்றது. அத்தகைய விருந்துபசாரம் 'காழி'யின் நீதிப்பரிபாலனத்தில் செல்வாக்குச் செலுத்தி வழிபிறழச் செய்து விடலாம் என்ற அச்சமே இதற்கான காரணமாகும். இத்தகைய விருந்துகளில் 'காழி' கலந்து கொள்வது வெறுக்கத்தக்கது என பகவி (1998, ப.14) அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே, வழக்காளிகளுக்கு 'காழி' விருந்தளிப்பதும் பொருந்தாச் செயற்பாடாகும். அலி (ரழி) அவர்களிடம் ஒருவர் விருந்தாளியாகத் தங்கி பின்னர் தனது முறைப்பாட்டை முன்வைத்த போது, அவ்வழக்கை முன்னெடுக்க அலி (ரழி) அவர்கள் மறுத்து விட்டார்கள் (பைஹகீ, 1925, ஹதீஸ் 20974, ப.137).

ஒரு குறைந்த பரிணாமத்திலேனும் நீதித்துறையில் இலஞ்சம் உள்நுழைந்து விடாது தடுப்பதில் இஸ்லாம் பெரிதும் கவனம் கொண்டுள்ளது என்பதைக் 'காழி' அன்பளிப்பு பெறுதல், விருந்தோம்பலில் கலந்து கொள்ளுதல் பற்றிய வரையறைகள் காண்பிக்கின்றன. ஏனெனில், பொது வாழ்வில் ஈடுபாடு கொள்வோர் இலஞ்சம் பெறுவது பெரும் குற்றமாகும் என்பது இஸ்லாத்தின் முடிவு. கலீபா உமர் (ரழி) அவர்களுக்கு ஒட்டகத்தின் சந்துப் பகுதியை அன்பளிப்பாக வழங்கியவன் அப்பகுதியை சுட்டிக் காட்டி தீர்ப்பைப் பெற முயன்ற

போது கலீபா உமர் (ரழி) அவர்கள் அன்பளிப்புக்களைப் பெற வேண்டாமென்றும், அவ்வாறு பெறுவது இலஞ்சம் ஆகும் என்றும் ஆணை பிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலஞ்சம் பெறுவதும், இலஞ்சம் வழங்குவதும், அதைப் பெற்றுக் கொடுக்க இடைத்தரகராக செயற்படுவதும் சபிக்கப்பட்ட செயற்பாடுகளாகும் (பைஹகீ, 1925, ஹதீஸ் 20980, ப. 138). இலஞ்சம் பெற்றுத் தீர்ப்பளிப்பவன் நரகை அடைவான் என்ற நபிமொழி நீதித்துறையில் இலஞ்சத்தின் ஊடுருவலைத் தெளிவாக தடை செய்கிறது (திர்மிதீ, ஹதீஸ் 1336, பா.3, ப.622). இவ்வாறு இலஞ்சம் வழங்கி தீர்ப்பை எதிர்பார்ப்பது, அதனைப் பெற்று சார்பாகத் தீர்ப்பளிப்பது இறை நிராகரிப்புக்கு சமமானவை என இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (வகீஉ, 918, ப.38). பொதுமக்களிடம் அன்பளிப்புப் பெறுவதைத் தவிர்க்கவே 'காழி'யினதும், அவரது குடும்பத்தினரதும் வாழ்க்கைச் செலவை அரசாங்கம் பொறுப்பேற்கும் நடைமுறையை ஆரம்ப காலம் முதல் முஸ்லிம் ஆட்சியாளர்கள் கொண்டிருந்தனர். 'காழி'க்கான சம்பளம் இத்தகைய செயற்பாட்டிலிருந்து அவரை பேணச் செய்யுமென்கிறார் அஸ் ஸுஹைலி (2002, ப.6243).

தற்கால நீதிப்பரிபாலனத்தில் ஒவ்வொரு நீதிபதியும் வெளிவாரி செல்வாக்கிற்கு உட்படுவதைத் தவிர்க்க நடத்தைக் கோவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீதிப்பரிபாலனச் செயற்பாடுகள் நீதிபதியை ஒரு பொதுச் சேவையில் ஈடுபடுத்துகிறது. எனவே, அவர் ஒரு பொதுச் சொத்து. அவருடைய வாழ்வு திறந்த புத்தகமாக காணப்படல் வேண்டும். அவருடைய கொடுக்கல் வாங்கல்கள் தனது அதிகார செயற்பாடுகளுடன் எவ்விதத்திலும் தொடர்புற்றிருத்தலாகாது. அவருடைய கொடுக்கல் வாங்கல்கள் நிதிச் சுற்று நிரூபத்துக்கேற்ப அமைதல் அவசியம். அவரது நன்னடத்தையை, நம்பகத் தன்மையை விமர்சனத்திற்குட்படுத்தும் எச்செயற்பாடும் நீதித்துறையின் மீது நம்பிக்கையை இழக்கச் செய்யும். பெறுமதியான பணப் பரிசிலை அவர் பெறுவதை முற்றாக தவிர்த்தல் வேண்டும். துர்நடத்தைச் செயற்பாட்டில் குற்றம் சுமத்தப்பட்டவராக ஒரு நீதிபதி ஆக்கப்படுவது அவர் மீதும் அவரது நடத்தை மீதும் ஐயங்களைத் தோற்றுவிக்கும். ஒரு நீதிபதியின் நடத்தை ஏனையோருக்கு முன்மாதிரியாகவும் மரியாதையை பெற்றுக் கொடுப்பதாகவும் அமைதல் வேண்டும் என்பதை நீதி ஒழுக்கவியல் தத்துவங்கள் குறிப்பிடுகின்றன (ஞயடிாயசறயடஇ 2006).

வழக்காளிகள் அன்பளிப்பு அல்லது இலஞ்சம் என்பவற்றை 'காழி'க்கு வழங்குவதன் மூலம் பக்கச்சார்பான தீர்ப்பைக் கோருவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம் என்பதனாலேயே 'இலஞ்சம் பெற்றுத் தீர்ப்பளிப்பவன் நரகம் செல்வான்' எனும் நபிமொழி ( பைஹகீ, 1925, ஹதீஸ் 1337, பா.3, ப.623) 'காழி'கள் மிகக் கண்டிப்பாக அதைத் தவிர்ந்து கொள்ள வேண்டுமென்பதை நினைவூட்டுகின்றது.

இவ்வாறு, இஸ்லாம் தெளிவாகவே ‘காழி’கள் இலஞ்சம் பெறுவதை மாத்திரமன்றி, அன்பளிப்புக்களைக் கூட பெறக் கூடாது என வலியுறுத்துகிறது. ஆனால், இலங்கையின் 1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் ‘‘காழி’கள் அன்பளிப்பு அல்லது இலஞ்சம் பெறுதல் பற்றிய தடைச் சட்டங்கள் எதுவும் கூறப்படவில்லை. ஆயினும், இதுபற்றி முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பாக முன்வைத்த விதந்துரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

‘காழி’ ஒருவர் முறையற்ற வகையில், தகுதியற்ற வகையில் அல்லது ஒழுக்கத்திற்கு அப்பாற்பட்ட முறையில் பண உபகாரம், அல்லது பயனை பிணக்கொன்றின் தரப்பினரிடமிருந்து கோரியிருந்தால், ‘காழி’கள் சபை அவ்விடயத்தில் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அறிக்கை அனுப்பலாம். அல்லது, பொருத்தமான நடவடிக்கைகளுக்காக எந்த ஒரு நீதிமன்றத்திற்கு, அல்லது பிற அதிகார சபைக்கு அறிக்கையிடலாம்.

வழக்காளிகளிடமிருந்து ‘காழி’களில் சிலர் அன்பளிப்புகளைப் பெறுவதாகவே தரவுகள் குறிப்பிடுகின்றன. வழக்காளிகளில் சுமார் 50 வீதமானவர்கள் ‘காழி’கள் அன்பளிப்புக்களைப் பெற்று பக்கச்சார்பாகத் தீர்ப்பளித்ததாக உறுதிப்படுத்தியுள்ளனர். இவர்களில் மிகப் பெரும்பான்மையினர் (67.9மூ) பெண்களும், ஏனையோர் (32.1மூ) ஆண்களும் ஆவர். இவர்களில் வர்த்தகம், சுயதொழிலில் ஈடுபடுபவர்கள் 53.6 வீதமானோரும், விவசாயம் செய்பவர்கள் 39.3 வீதமானோரும் ஆகும். இவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் (87.2மூ) தங்களிடம் ‘காழி’கள் பணத்தைப் பெற்றதாகவும், பொருட்களைப் பெற்றதாக 9.7 வீதமானோரும், ஆவணங்களைப் பிரதிபண்ணுமாறு வேண்டப்பட்டதாக 3.2 வீதமானோரும் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஆவணங்களைப் பிரதிபண்ணுமாறு தம்மிடம் ‘காழி’ கோரியதாக 3.2 வீதமானவர்களே கருத்துத் தெரிவித்த போதிலும், அது இன்று ‘காழி’ நீதிமன்றங்களில் சர்வ சாதாரணமான விடயமாக மாறி உள்ளமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி ‘காழி’களிடம் வினவப்பட்ட போது வழக்குகளுக்கான விண்ணப்பங்களை கொழும்புக்குச் சென்று எடுத்து வருவது சிரமம். அவ்வாறு அங்கு சென்றாலும் மட்டுப்படுத்தப்பட்ட தொகையிலான விண்ணப்பங்களே வழங்கப்படுகின்றன. ஆதலால் தான், வழக்காளிகள் அவர்களுக்குத் தேவையான விண்ணப்பங்களைப் பிரதி பண்ணுமாறு கோரப்படுகின்றனர் என்ற நியாயத்தை பெரும்பாலான ‘காழி’கள் கூறுகின்றனர். ஆயினும், ‘காழி’கள் மேலதிக விண்ணப்பங்களையும், ஏனைய ஆவணங்களையும் பிரதி பண்ணுமாறு கோருவதும் அவதானிக்கப்பட்டது.

## 6. முடிவுரை

இஸ்லாத்தில் நீதிப்பரிபாலனம் வணக்க வழிபாடுகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. எனவே, இஸ்லாமிய மூல ஆவணங்கள் இத்துறை தொடர்பில் போதிய விபரங்களை முன்வைக்கின்றன. நீதிப்பரிபாலனத்தில் 'காழி' பிரதான செயற்பாட்டாளராக கருதப்படுகிறார். 'காழி'யின் நடத்தை பற்றி இஸ்லாமிய சட்டத்துறை அதிக கரிசனை கொண்டுள்ளது. ஆகவே, 'காழி'யின் நன்னடத்தை, நீதமான செயற்பாடு, தூய்மையான எண்ணம், முன்மாதிரியான நடத்தை, பக்கச்சார்பின்மை போன்ற 'காழி' கொண்டிருக்க வேண்டிய 'ஆதாப் அல் காழி' அம்சங்களை இஸ்லாமிய சட்டத்துறை தெளிவாக விபரிக்கிறது. இலங்கையில் பெண்கள் தொடர்பில் 'காழி'யின் நடத்தை குறித்த சில விமர்சனங்கள் உள்ள போதிலும் அவரின் நல்லொழுக்கம், நடுநிலைமை, சமமாக நடாத்துதல் என்பன தொடர்பில் சிறந்த மதிப்பீடு உண்டு. இவ்வாய்வை காழிகளுக்கான முன்மாதிரி நடத்தைக் கேவையாக அல்லது காழிகளின் நடத்தைசார் வழிகாட்டியாகக் கொள்ள முடியும்.

## உசாத்துணைகள்


அஹ்மத், புஆத் அப்துல் முன்இம் (1996) *இப்னு கல்தூன் வறிஸாலதுஹு லி அல்-குழாத்.* றியாழ்: தாருல் வதன்.

அல்-உமரி, அக்ரம் லியா (2003) *அஸ்ருல் கிலாபத் அல்-ராஷிதா.* 4ம் பதிப்பு. ரியாழ்: மக்தபதுல் உபைகான்.

அல்-பகவி (1998) *கிதாபு அதபில் காழி*, ரியாழ்: தாருல் மனார்.

அல்-மாவர்தி (1972) *அதப் அல்-காழி*, பக்தாத்: மத்பஅதுல் ஆபி.

அல்-மாவர்தி (1994) *அல்-அஹ்காம் அல்-ஸுல்தானிய்யா வ அல்-விலாயாத் அல்-தீனிய்யா*, லெபனான்: தாருல் கிதாப் அல் அரபி.

அல்-ஹுமைழி, அப்துர் ரஹ்மான் (1989) *அல்-கழாஉ வநிழாமுஹு பி அல்-கிதாபி வ அல்-ஸுன்னா.* மக்கா: ஜாமிஆ உம்மில் குரா.

அல்-ஸுஹைலி, வஹபத் (2002) *அல்-பிக்ஹ் அல்-இஸ்லாமி வஅதில்லதுஹு.* 2ம் பதிப்பு. லெபனான்: தாருல் பிக்ர்.

அல்-ஸர்ஹஸி, ஷம்ஸுத்தீன் (1912) *அல்-மப்சூத்.* பேய்ரூத்: தாருல் ம.்.ரிபா.

ஆல்-ஷவ்கானீ, முஹம்மத் (2002) *நைல் அல்அவ்தார்.* பேய்ருத்: தார் அல்-ம.்.ரிபா

இப்னு அபித்தம், அல்-காழி இப்றாஹீம் (1987) *கிதாபு அதப் அல்-கழா*, பேய்ரூத்: தாருல் குதுப் அல் இல்மிய்யா.

புகாரி (1987) *அல் ஜாமி.். அல்-ஸஹீஹ் அல்-முக்தஸர்.* பேய்ரூத்: தாரு இப்னில் கதீர் அல்யமாமா.

பைஹகீ (1925) *அஸ்ஸுனன் அல்-குப்ரா.* ஹைதராபாத்: மஜ்லிஸ் தாஇரதில் மஆரிப்.

மக்கி முஹம்மட் (2011) *காழி நீதிபதிகளுக்கான ஒழுக்காற்று விதிகள்.* கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல்முன்னணி.

முஸ்லிம் அல்-நைஸாபுரி. *ஸஹீஹ் முஸ்லிம்.* தாரு இஹ்யா லித்துராஸில் அரபி, பேய்ரூத்

வகீஉ (918) *அஹ்பார் அல்-குழாத்.* லெபனான்: ஆலமுல் குதுப்.

யூஸுப், அப்த் அல்-ஹஸீப் அப்த் அல்-ஸலாம் (1986) *அல்-காழி வ அல்-பய்யினா.* குவைத்: மக்தபதுல் ம.்.லா.

Jaldeen, M.S. (2004) *The Muslim Law of marriage divorce and maintenance in Sri Lanka.* Colombo: Haji Omar Foundation for Peace, Education and Research.

Jazeel, M. I. M., & Fowzul, M. B. (2014a). Dispensing Justice: Court System in Islam from Historical Perspective. Paper presented at the 4th International Symposium 2014 on Emerging Trends & Challanges on Sustianable Development South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka.

Jazeel, M. I. M., & Fowzul, M. B. (2014b). Qualification and Behavour of the Judge: An Islamic Perspective. Paper presented at the 3rd International Conference of Eastern University on "Sustainable Development through Innovations" Eastern University of Sri Lanka, Vantharumoolai, Sri Lanka.

Jazeel, M. I. M., & Fowzul, M. B. (2018). Qualifcations of Quazi in Sri Lanka: A Field Study from Islamic Perspective *Sri Lankan Journal of Arabic and Islamic Studies*, 1(1), 32-51.

YK Sabharwal, Canons of judicial ethics: Speech as part of the MC Setalvad Memorial Lectures series